பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 12 2024 7 15

செவ்வாய்கிழமை இரவு

தலைப்புச் செய்திகள்

- தரமான மருத்துவ சேவையை குறைந்த செலவில் வழங்கும் நாடாக இந்தியா உருவெடுத்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
- ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் 46 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான 24 வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று தொடங்கி வைத்தார்.
- ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் ஆய்வுக்கு அனுப்ப மத்திய அரசு பரிந்துரை செய்துள்ளது.
- மத்திய அரசின் நடப்பு நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகளுக்கு மக்களவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆஸ்திரேலியா-வுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் இன்று ஆட்டநேர இறுதியில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 252-ரன் எடுத்துள்ளது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

தரமான மருத்துவ சேவையை குறைந்த செலவில் வழங்கும் நாடாக இந்தியா உருவெடுத்து வருவதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் மங்களகிரி எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் பேசிய அவர், மருத்துவ சுற்றுலாவை மேம்படுத்துவதில் மருத்துவர்களின் பங்களிப்பு முக்கியமானது என்றார்.

மருத்துவத் தொழில் மனித குலத்துக்கு சேவையாற்றுவதற்கான பாதையை காட்டுவதாகக் குறிப்பிட்ட அவர், மருத்துவர்கள் பணியில் கவனம் செலுத்துவதோடு கற்றல் மற்றும் ஆராய்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

இந்த கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள சைட்டோ மரபியல் ஆய்வுக்கூடம் புதுமையான கண்டுபிடிப்புகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமாக கருதப்படுகிறது என்றும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

[]<<<>>>[]

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் 46 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான 24 வளர்ச்சித் திடடங்களை பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று தொடங்கி வைத்தார்.

ராஜஸ்தான் மாநிலத்தில் முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா தலைமையிலான அரசு பதவியேற்று முதலாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட பிரதமர், மின்சாரம், நெடுஞ்சாலை, ரயில்வே மற்றும் நீர்பாசன திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

11 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ள மத்திய அரசின் ஏழு திட்டங்களையும், மாநில அரசின் இரண்டு திட்டங்களையும் பிரதமர் இன்று தொடங்கி வைத்தார்.

35 ஆயிரத்து 300 கோடி ரூபாய் மதிப்பிலான 15 புதிய திடடங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களின் பாசனத்திற்கான பார்வதி – காலிசிந்த் - சம்பல் நதிநீர் இணைப்பு திட்டமும் இதில் அடங்கும்.

அப்போது பேசிய பிரதமர், ராஜஸ்தான் மாநிலத்தில் தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வாக இந்த நதிநீர் இணைப்புத் திட்டம் அமையும் என்று கூறினார்.

முதலீடுகளுக்கு உத்வேகம் அளிப்பதோடு மட்டுமல்லாமல் இத்திட்டத்தின் வாயிலாக அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இரு மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் இந்த திட்டம் ஆதாமாக விளங்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

மத்திய பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் நதிநீர் பிரச்சினைகளுக்கு ஒப்பந்தத்தின் மூலம் சுமூக தீர்வு ஏற்பட்டுள்ளதை மற்ற மாநிலங்களும் புரிந்து கொண்டு இதே நடைமுறையை பின்பற்ற வேண்டுமென்றும் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டார்.

சிறந்த அரசு நிர்வாகத்துக்கும், ஆட்சிக்கும் பிஜேபி வித்திட்டு வருவதாகத் தெரிவித்த பிரதமர், பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நேர்மையுடன் செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

இதன் காரணமாகவே ஒவ்வொரு மாநிலத்திலும் பிஜேபி-க்கான ஆதரவு பெருகி வருவதாக அவர் தெரிவித்தார்.,

மக்களின் நம்பிக்கையை பெற்றதால்தான் தொடர்ந்து மூன்றாவது முறையாக மத்தி.யில் பிஜேபி ஆட்சிக்கு வந்ததாகவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

ஒரே நாடு – ஒரே தேர்தல் அரசியல் சாசன திருத்த மசோதா இன்று மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதாவை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து, இது குறித்து முடிவெடுக்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதாவை கொண்டு வருவதற்கு ஆதரவாக 269 உறுப்பினர்களும், எதிராக 198 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

இதனையடுத்து இம்மசோதாவை மத்திய சட்ட அமைச்சர் திரு அர்ஜுன்ராம் மெஹ்வால் மக்களவையில் தாக்கல் செய்தார்.

மசோதாவுக்கு காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் உத்தவ் தாக்ரே தலைமையிலான சிவசேனா ஆகிய கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இம்மசோதாவை கூட்டு நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென அவர்கள் வலியுறுத்தினர்.

இதனை எற்க மறுத்த அமைச்சர் திரு அர்ஜூன்ராம் மெஹ்வால், அரசியல் சாசனத்தின் அடிப்படை கட்டமைப்புக்கு எதிராக இந்த மசோதா அமையவில்லை என்று விளக்கம் அளித்தார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம்நாத்கோவிந்த் தலைமையிலான உயர்மட்டக்குழு ஒரே நாடு – ஒரே தேர்தல் என்பது குறித்து விரிவாக பல்வேறு தரப்பினரிடம் ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ததாக தெரிவித்தார்.

அரசியல் சட்ட நிபுணர்கள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடமும் இது குறித்து ஆய்வு செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

முன்னதாக பேசிய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, ஒரே நாடு – ஒரே தேர்தல் மசோதா மத்திய அமைச்சரவையின் பரிசீலனைக்கு வரும்போதே இதனை கூட்டு நாடாளுமன்ற குழு பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியதை சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து மத்திய சட்ட அமைச்சா திரு அர்ஜூன்ராம் மெஹ்வால் இதனை கூட்டு நாடாளுமன்ற குழு பரிசீலனைக்கு அனுப்ப பரிந்துறை செய்தார்.

[]<<<>>>[]

மத்திய அரசின் நடப்பு நிதி ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகளுக்கு மக்களவை ஒப்புதல் அளித்துள்ளது.

மொத்தம் 87 ஆயிரத்து 762 கோடி ரூபாய்க்கு கூடுதல் செலவினங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், 44 ஆயிரத்து 142 கோடி ரூபாய் கடன்களை திருப்பிச் செலுத்தவும், வட்டி செலுத்துவதற்கும் ஒதுக்கீடு செய்யப்படடுள்ளது.

இது தொடர்பான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இந்தியா உலகின் வேகமாக வளரும் பொருளாதாரமாக திகழ்கிறது என்றார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் எட்டு புள்ளி மூன்று சதவீதமாகவே தொடர்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

வரும் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து மேம்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாடு முழுவதும் இதுவரை 24 கோடியே 60 லட்சம் மண்வள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், விவசாயிகள் தங்களது நிலத்தின் தன்மைக்கு ஏற்ப பயிர் சாகுபடியை தீர்மானிக்க இந்த மண்வள அட்டைகள் உதவுவதாகக் கூறியுள்ளார்.

தேசிய உற்பத்திக் கவுன்சில் ஆய்வின்படி ரசாயன உரங்களின் பயன்பாடு பத்து சதவீதம் குறைந்துள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

பாரம்பரிய மற்றும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பது, மண்ணில் கார்பன் அளவை அதிகரிக்கச் செய்யும் என்றும் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

[]<<<>>>[]

அரசுமுறை பயணமாக இந்தியா வந்துள்ள இலங்கை அதிபர் திரு அனுர குமார திசநாயகே இன்று பீகார் மாநிலத்தில் உள்ள உலக புராதன சின்னமாக விளங்கும் புத்த கயா மகா போதி கோவிலுக்குச் சென்று வழிபட்டார்.

அவருடன் 14 உறுப்பினர் தூதுக்குழுவினரும் இக்கோவிலுக்குச் சென்றனர்.

இக்கோவில் வளாகத்தில் அமைந்துள்ள ஏழு முக்கிய இடங்களையும் இலங்கை அதிபர் பார்வையிட்டதாக புத்த கயா கோவில் நிர்வாகக் குழுவின் செயலர் டாக்டர் மகா ஸ்வத மகா ரதி தெரிவித்தார்..

இலங்கை அதிபர் இரண்டு நாட்கள் புத்த கயாவில் தங்கி இருப்பார் என்றும், அங்குள்ள இலங்கை கோவிலுக்கும் சென்று வழிபட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

நேரு யுவகேந்திரா சார்பில் நாடு முழுவதும் எனது பாரதம் என்ற தலைப்பிலான இளையோர் திருவிழா நடைபெற்று வருகிறது.

திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி அருகே உள்ள அம்மையப்பனில் நடைபெற்ற இளையோர் திருவிழாவை ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய நேரு யுவகேந்திராவின் துணை இயக்குநர் திருநீலகண்டன், மாவட்ட அளவிலான இளையோர் திருவிழாவில் வெற்றிபெறுவோர் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றார்.

*( சவுண்ட்பைட் - திருநீலகண்டன்) --- 40 செகண்ட்*

[]<<<>>>[]

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அதே இடத்தில் நீடிப்பதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அடுத்த 24 மணி நேரத்தில் மாநிலத்தின் வடகடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக அவர் கூறினார்.

கடல் கொந்தளிப்பாக காணப்படும் என்பதால் மீனவர்கள் அடுத்த மூன்று நாட்களுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

பிரிஸ்பேனில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலியா-வுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்ஸில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 252-ரன் எடுத்திருந்தபோது போதிய வெளிச்சமின்மை காரணமாக இன்றைய ஆட்டம் முடித்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 445 ரன்

[]<<<>>>[]

நவி மும்பை சர்வதேச டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சகாஜா யாமளபள்ளி - ஜப்பானின் Hiroko இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*End of News*